2012 பிப்ரவரி 4]

(ஊ) தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/2012), மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

பிற்பகல் 1–10

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/2012)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள், சுருக்கமாகக் கருத்துகளைக் கூறுங்கள்.*

திரு. ஏ. லாசர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களால் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டு அமலில் உள்ள இந்தச் சட்டம் கொண்டுவரப்படுவதில் மாற்றுக் கருத்து இல்லை. அதே நேரத்தில், இந்த மதிப்புக் கூட்டு வரியின் காரணமாக, ஒரு வணிகர் கொள்முதல் செய்கிற இடத்தில் தன்னுடைய இந்தக் கூட்டு வரியைச் செலுத்திவிடுகிறார். பின்பு அவர் விற்கிறபோது, அதை வாங்கக்கூடியவரிடம் அதற்காக அவர் செலுத்திய இலாபத்தையும் இணைத்து, தன்னுடைய அந்தக் கூட்டு வரியை வாங்குகிறார். இதன் காரணமாக, வாங்கக்கூடிய மக்கள், வியாபாரியினுடைய இலாபத்திற்கும் சேர்த்து கூட்டு வரி கட்ட வேண்டிய ஒரு நிலைமை இருப்பதை மாற்ற வேண்டுமென்பது என்னுடைய கருத்து.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. லாசர், சுருக்கமாகப் பேசி முடியுங்கள்.*

@ 3–2–2012 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

திரு. ஏ. லாசர்: இதில், கடந்த மத்திய காங்கிரஸ் ஆட்சியின் VAT வரிக்கான ஆலோசனைக் குழுத் தலைவராக இருந்த, மேற்கு வங்க அரசினுடைய முன்னாள் நிதியமைச்சர் திரு. அஸ்வீன் தாஸ் குப்தா ஓர் ஆலோசனை சொல்லியிருக்கிறார். அதைத் தமிழக அரசு இதோடு இணைத்துப் பரிசிலிக்க வேண்டுமென்று கருதுகிறேன். மத்திய கலால் வரி, மத்திய சேவை வரி, மாநில அரசினுடைய இந்த விற்பனை வரி, இந்த மூன்றையும் இணைத்து சரக்கு மற்றும் சேவை வரி என்கிற தன்மையில் ஒரே வரியாக மாற்றினால் வாங்குகிற மக்களுக்கு இந்தச் சிரமத்தைக் குறைக்க முடியும் என்கிற ஆலோசனை, அதை நம்முடைய தமிழக அரசும் ஏற்கும் என்று கருதுகிறேன். அதை நம்முடைய அரசு ஏற்று, இதோடு இணைத்தால் வாங்குகிற பொதுமக்களுக்கு பாதிப்புக் குறையும் என்கிற கருத்தைப் பதிவு செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற கருத்துக்கும், இப்போது கொண்டுவந்திருக்கின்ற இந்தச் சட்டமுன்வடிவுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லையென்பதை முதலில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர் சொல்கின்ற கருத்து—அவருடைய இயக்கத்தைச் சேர்ந்தவரும், West Bengalஇல் நிதியமைச்சராகவும் இருந்த திரு. அஸ்வீன் தாஸ் குப்தா அவர்கள்தான் இந்த மதிப்புக் கூட்டு வரியை அமல்படுத்துகின்ற Empowered Committee—யினுடைய சேர்மேனாக இருந்தார். அவர் இருக்கும்போதுதான் இந்த விதிமுறைகள் வகுக்கப்பட்டு, இது இந்தியாவிலே நடைமுறைப்படுத்தப்பட்டது. இப்போது அவர் சொல்கின்ற கருத்து, அந்த சேவை வரி—GST, அந்தப் பொருட்கள் மற்றும் சேவை வரியை அமல்படுத்தலாம் என்று சொல்கிறார். அது இன்னும் நடைமுறைக்கு வரவில்லை. அது விவாதத்திலே இருக்கின்றது. அதிலே தமிழக அரசு, நம்முடைய அம்மாவின் அரசு பல்வேறு எதிர்ப்புகளைத் தெரிவித்திருக்கின்றது. ஏற்கெனவே, இந்த மதிப்புக் கூட்டு வரியை அமல்படுத்துவதன்மூலம், நல்ல சிறப்பாகச் செயல்படுகின்ற தமிழ்நாடு போன்ற மாநிலங்களுக்கு இழப்பு ஏற்படும். எனவே, தமிழ்நாட்டினுடைய கருத்துகள்

2012 பிப்ரவரி 4] [திரு. சி.வி. சண்முகம்]

முழுமையாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமென்று, அப்பொழுதே பல்வேறு கருத்துகளை நாம் முன்வைத்தோம். ஆனால், அதற்குப் பிறகு, ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிறகு, மைனாரிட்டி தி.மு.க. அரசு அந்தக் கருத்துகளையெல்லாம் கருத்தில்கொள்ளாமல், அந்த மதிப்புக் கூட்டு வரியை அப்படியே ஏற்றுக் கொண்டதால், இன்றுவரைக்கும் மதிப்புக் கூட்டு வரிமூலம் ஏற்பட்டுள்ள இழப்பின் மூலமாக நமக்குத் தரப்பட வேண்டிய தொகையான 3,861.12 கோடி ரூபாய் தரப்படவில்லை.

அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளவிருக்கிற மதிப்புக் கூட்டு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவிலே, கடந்த ஆண்டே, நமக்கு வரவேண்டிய——4 சதவீதத்திலிருந்து, 5 சதவீதமாக நம்முடைய அண்டை மாநிலங்கள் அத்தனையும் வரி விகிதத்தை உயர்த்தியிருக்கின்றன; ஆனால், கடந்த 2010–2011 ஆம் ஆண்டு கடந்த ஆட்சியிலே——அதை உயர்த்தாததால், மத்திய அரசாங்கத்திடமிருந்து 2,000 கோடி ரூபாய் உங்களுக்குக் கூடுதலாக வருமானம் கிடைத்திருக்கும், அதை, அந்தக் கணக்கில் அவர்களாகவே எடுத்துக்கொண்டு 2,000 கோடி ரூபாயைக் கழித்து நமக்கு இழப்பை ஏற்படுத்தியிருக்கின்றார்கள். ஆகவேதான் இதற்கும் நீங்கள் சொல்கின்ற கருத்துக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை. இப்போது கொண்டுவந்திருக்கின்ற சட்டத் திருத்தம் என்பது, பதிவு செய்திருக்கின்ற ஒரு வணிகர் 5 இலட்சம் அல்லது 10 இலட்சம் ரூபாய்க்கு, தான் வரி செலுத்தி கொள்முதல் செய்கின்ற அந்தப் பொருட்களின் மீதான வரியை, ரூபாய் 10 இலட்சத்திற்கும் உள்ளாக அவர் விற்பனை செய்தால் உள்ளீட்டு வரி (input tax) சலுகை அவருக்குக் கிடையாது. அந்த வணிகர் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக, அவர் கொள்முதல் செய்த பொருட்களை விற்பனை செய்யும்போது, அந்தப் பொருட்களுக்கு உள்ளீட்டு வரியை (input tax) அந்தச் சலுகையைக் கொடுக்கலாம் என்ற 47(1) பிரிவைத் திருத்தம் செய்வதற்காகக் கொண்டுவந்திருக்கிற சட்டத் திருத்தம் இது. அந்த வணிகர்களுக்கு, சிறு வணிகர்களுக்கு நல்லதைச் செய்ய வேண்டுமென்ற ஒரு நல்ல நோக்கத்திற்காக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, இந்தச் சட்டத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

2012 பிப்ரவரி 4]

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/2012) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

(எ) தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/2012), மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/2012)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

@ 3–2–2012 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.